# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1986 ★ இதழ் 125



# தேசீய வீரர்களின் தராதரம் யாது?

**வீ**ரமும் காதலும் தமிழர் வாழ்வில் புறத்திணை மருங்கிலும், அகத்திணை மருங்கிலும் போற்றிப் புகழப்பெற்றவை. எட்டுத்தொகையென இன்றுள்ள பழைய சங்ககால இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழர் எப்படி வாழ்ந்தார்கள் என்று கூறுகின்றன.

மிடுக்கிலாதவனை வீரன் என்றும் கொடுப்பிலாதவனை வள்ளல் என்றும் புனைந்துரைக்கத் தெரியாதவன் பழந்தமிழன். வீட்டுக்கு வீரன் நாட்டுக்குச் சோரனாயின் அவனை என்னென்பது. தன்னினம் வாழச் சதிசெய்த கும்பல் தேசீய வீரராமோ? தேசீயம் என்றால் என்ன என்று மகாத்மா காந்தியடிகளும், விநோபாஜியும் உழைத்துக்காட்டவும்; இரவீந்திரநாத்தாகூரும், சுப்பிரமணிய பாரதியாரும் உரைத்துக்கூறவும், கண்டும் கேட்டும் வாழ்ந்த கும்பல் தேசீயமென்றால் என்ன என்பதை மனங்கொள்ளாமல் தாமுண்டு, தங்கள் நிலமுண்டு என்று தம்வளம் அபிவிருத்தி செய்த கும்பல் தேசீய வீரராமோ?

ஒன்றுக்குமேற்பட்ட இனம், மதம், மொழி நிலவும் நாட்டில், எல்லோரும் இந்நாட்டவர் என்று தோழமை கூறுதல் தேசீயம். இராமபிரான் தன் சிற்றன்னையர் வயிற்றுப்பிறந்த தம்பியர் மூவரையும், வேறெங்கேயோ பிறந்து வாழ்ந்த குகன், சுக்கிரீவன், விபீடணன் ஆகியோரையும் தன் தம்பியர் எனத்தழுவியதே தேசீயம்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)



கவியோகி, மகரிஷி, டாக்டர்
சுத்தானந்த பாரதியார்
பிறந்த நாள் 11-5-86

★ தரித்திரம் வந்தாலும் கடமை தவறலாகாது ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனூர் தேவாரம்

### திருவோணகாந்தன்தளி

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றுர்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழலடி தொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறென் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே.

திருச்சிற்றம்பலம்

திருவோணகாந்தன்தளி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே, பஞ்சகௌவியம் எனவுள்ள நெய், தயிர், பால், கோசலம், கோமயம் என்பவற்றுல் தேவரீரை நாள்தோறும் வழிபடுவோரின் கையில் பணம் காணப்படுவதில்லை. அவ்வாறே தேவரீரது கழலணிந்த திருவடியை வணங்கி ஏதாவது பெற்றுலன்றி இவ்வுலகத்தில், ஐம்புலன்களாகிய தண்டலாளர்கள் ஐந்து பக்கங்களிலும் இழுத்துச் சுழற்றச் சுழன்று, அச்சுழற்சியான துன்பம் என்னும் ஆழ்ந்த குழியில் அகப்பட்டு ஏறமாட்டாது அழுந்திப்போவேனுகிய அடியேனுக்கு அதனின்றும் கரையேறும் வழியொன்றைச் சொல்லியருள்வீராக.




## வெருவந்த செய்யாமை

(அஞ்சத்தக்க காரியங்களைச் செய்யாமை)

''வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்''.

ஆளுபவன் குடிகள் அஞ்சும் செயல்களைச் செய்து ஆட்சிசெய்யும் கொடுங்கோலனுய் இருந்தால், அவன் திண்ணமாக விரைவில் அழிவான்.

**Abstaining from a Reign of Terror**

If the ruler be a tyrant who strikes terror, he would perish swiftly and surely.




## புண்ணியக்கண்

சைவ சமயத்தின் புண்ணியக்கண் எனப் புகழ்ந்து போற்றப்பெற்ற சமகாலப் பெரியவர்களுள் குழந்தைப் பராயத்தவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் ஒருவர். மற்றவர் திருநாவுக்கரசு நாயனுர்.

புறச்சமயப் புழுதிகள் போக்க வந்தவர் திருஞானசம்பந்தர். அவர் சிவஞான சம்பந்தம் பெற்றவர். அவரைச் சம்பந்தர் என்றும் ஞானன் என்றும் போற்றுவர். சம்பந்தரே தம் திருநாமத்துக்கு அடைமொழிகள் அணிசெய்யுமாறு அருளியுள்ளார். அணிகொள் சம்பந்தன், அழகார் சம்பந்தன், அந்தமில் சம்பந்தன், இசைஞானசம்பந்தன், இணையில் சம்பந்தன், கலைஞான சம்பந்தன், சந்தங்கொள் சம்பந்தன், தமிழ்ஞான சம்பந்தன், நல்லகேள்வி சம்பந்தன், பழுதில்ஞானசம்பந்தன், மறைஞான சம்பந்தன், மெய்ஞ்ஞான சம்பந்தன் என்பன அவர் திருநாமங்களாக நிலவின.

அவர் புகலியர்கோன், கழுமலவூரர், பண்மலிந்த மொழியவர் எனவும் போற்றப்பெற்றவர். பெரியவர்கள் பலர் அவரின் திருநாமத்தைச் சொல்லவும், அவர் தோன்றிய ஊரிற் கால்வைக்கவும் அஞ்சினர். அவர் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர். தமிழும் சைவமும் அவரின் மூச்சு. அவரின் மலர் வாயில் வந்த பாடல்கள் திரு

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)



## வினாவும் விடையும்

முன்னர் கேட்ட வினாக்களுக்கு
முடிந்த வரையில் விடை சொன்னேன்
இன்னும் கேட்க விரும்பினால்
ஏன் ஏன் என்று கேட்டிடுவாய்.

1. தலைமயிர் வெட்டப்படும் போது நோ உண்டாவதில்லை.
அவற்றுக்கு நரம்புகள் இல்லை. உணர்ச்சி இல்லை.
2. குடைச்சீலை கறுப்புநிறமாயிருத்தல் நல்லது.
இந்த நிறம் சூட்டைக் கிரகித்துக்கொள்ளும்.
3. இராப்பொழுதில் மரத்தடியில் உறங்குதலாகாது.
அங்கே கரியமிலவாயு வெளிப்படுகிறபடியால்.
4. காந்தத்தை ''மக்னற்'' என வழங்குகிறார்கள்.
அது மக்னீசியா என்னும் இடத்தில் கிடைத்ததால்
5. நெஞ்சை நிமிர்த்தி இருத்தல் நடத்தல் நல்லவை
சுவாசப்பைகள் சுருங்காமல் இருப்ப.
6. எரிமலைகள் நெருப்பு கக்குவது
பூமியின் அடியில் நெருப்புக் குழம்பு உள்ளதால்
7. சூரியனிலும் பெரிய நட்சத்திரங்கள் மிகச்சிறியனவாகத் தோன்றுகின்றன.
அவை வெகுதூரத்தில் இருப்பனவாதலால்
8. பூனை உயரத்திலிருந்து குதித்தாலும் நோவதில்லை.
காலடியில் தடித்தசவ்வு உளதால்.
9. சிலந்தி பூச்சி இனத்தைச் சேராதது.
அதற்கு எட்டுக்கால்கள் உளவாதலால்.
10. வான்கோழியை ''ரேக்கி'' என்கிறார்கள்
அது ரேக்கி நாட்டிலிருந்து வந்தது.
11. கோடைகாலத்தில் பகற்பொழுது அதிகம்
அவ்வேளையில் வெளிச்சம் நீண்ட நேரம் கிடைப்பதால்.
12. கோழிக்குஞ்சு நடக்கும்போது தலையை அசைக்கிறது
விழுந்து விடாமல் தடுக்கும் வழியாதலால்.
13. கடற்கரையில் அதிக மணல் கிடைப்பது
அலைகள் கொண்டு வந்து குவிப்பதால்.
14. றெயில்நிலயமேடை இருபுறமும் சரிவாய் இருப்பது
பிரயாணிகள் விழுந்து விடாமல் தடுப்பதற்காக.

## இரங்கற்பாக்கள்

இரங்கற்பாக்கள் கையறுநிலைச்செய்யுள் எனவும், மன்னைக்காஞ்சி எனவும் முற்காலத்தில் வழங்கி வந்தன. சங்கவிலக்கியங்களுள் நீத்தார் பெருமைகளை நினைவுறுத்தும் பாடல்கள் சிலவுள. அவை சோகமயமானவை. நீத்தார் பெருமையை நெஞ்சில் நினைந்து நினைந்து புலவர் பாடிய பாடல்கள் அவை. முற்காலத்தில் காவலன், பாவலன், வள்ளல் என்றித்திறத்தோர் மறைந்த போது அவர் தம் குணமகிமைகளைக் குறித்து அவரின் பிரிவால் தமக்கும் உலகினருக்கும் உண்டான துன்பம் வெளிப்படத் தோன்றப் புலவர் யாத்த பாடல்கள் துன்பநிலைப்பாடல்கள் என்பர்.

ஆங்கிலத்தில் வழங்கும் பலவகையான தன்னுணர்வுப் பாடல்களுள் எலர்ஜி என்னும் பாடல்வகையும் ஒன்று. தலைசிறந்த பாவலர்களான கிறே, மில்ரன், ஷெல்லி, ரெனிசன் முதலானோர் இரங்கற்பாக்கள் பாடியவர்களுள் இணையில்லாதவர்கள். அவர்தம் அவலச் சுவைப்பாடல்களால் ஆங்கிலப்புலமை அதிகமுயர்ந்துள்ளது. நாட்டுப்புறத்தேவாலயமொன்றின் இடுகாட்டு நடுகல்மீது கிறே என்பார் பாடிய பாடலும், நீரில் மூழ்கியிறந்த தம்கல்லூரித்தோழன் எட்வேட்கிங் மீது மில்ரன் பாடிய லிசிடாஸ் என்னும் ஆயர்பாடி அருங்கவியும், ஷெல்லி என்பார் கீற்ஸ்புலவர் இளமையில் மறைந்தபோது மனமுருகிப்பாடிய அடோனிஸ் என்னும் பாடலும், ஆதர்ஹலம் என்னும் தம்நண்பன் இறந்த போது ரெனிசன் நினைந்துருகிப்பாடிய இன்மெமோரியம் பாடலும் உலகம் போற்றும் உயர்ந்த தரத்தனவாகும்.

சங்ககாலத்திலும் அதன் பிற்காலத்திலும் எழுந்த இரங்கற்பாக்களின் வேறாய் இன்று வழங்கும் நினைவுப் பாடல்களின் போக்கு அமைந்துள்ளது. அது போக, பிற்காலத்தில் இரங்கற்பாக்கள் பாடியவர்களுள் எம் நாட்டவருள் ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, சுவாமி விபுலானந்தர் தலைசிறந்தவர்களாவர். நாவலர் அவர்கள் தமது மாணாக்கன் சுப்பிரமணியபிள்ளை மீது கண்ணீர் பெருக்கிப் பாடியபாடல்கள் ''என்னுடைய கண்மணியே'' என்று தொடங்குவன. சுவாமிவிபுலானந்தர் தம்நண்பர் கந்தசுவாமி என்பார்மீது கண்கலங்கிப் பாடிய பாடலே கங்கையில் விடுத்த ஓலை என்பதாகும். தாமோதரனார் தம்காலத்துப் புலவர்களான ஆறுமுகநாவலர், விசுவநாதபிள்ளை முதலானோர் மீதும் தம்மருமைக் குமாரன் ஒருவன் மீதும் பாடிய பாடல்கள் அற்புதமானவை.

இந்தமரபில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் இற்றைக்கு நாற்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் மறைந்த கந்தமடம் சுவாமிநாத பண்டிதர் மீது பாடிய பாடல் முந்நூறடிக்கு மேற்பட்ட முழுநீளப்பாடல். மறைந்த மேதையின் புகழை நினைந்துருகச் செய்வதோடு அன்னார் பெயர் பூண்ட மற்றொரு சுவாமிநாதப்பெரியவரின் வஞ்சகச் செயலையும் அம்பலமாக்கிக்கண்டிக்கும் நீர்மையில் அமைந்துள்ளது.

★ முதுமை வருமுன் முதல்வனை அறிக ★

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



மில்க்வைற் தாயார் மீனாட்சிப்பிள்ளை நினைவாகக் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் ஓர் ஆய்வுக்கூடமுண்டு. அங்கே அண்மையில் அன்னையார் நினைவை மிகைப்படுத்த அன்னாரின் படத்தைத் தொழிலதிபர் கனகராசா கல்வித்தினைக்களமறியத் திறந்து வைத்தார். திருநெல்வேலி இந்துவாலிபர்சங்கம் எழுபத்தைந்து ஆண்டு பழைமை வாய்ந்தது. பழைய தலைமுறையினருள் அப்புக்காத்தர் தம்பித்துரை அவர்கள் அதனை இன்று வழிநடத்துகிறார். வழிப்போக்கர்களுக்கு நீர்விடாயுண்டானால், நீர் வழங்குவதற்கு அவர்கள் கிணறமைத்ததைத் தொடர்ந்து தண்ணீர்த் தொட்டி அமைத்து குழாய் தொடுத்து நீரூட்டுவதற்கு மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை நினைவாக ஆவன செய்துள்ளார் தொழிலதிபர் கனகராசா அவர்கள்.

மில்க்வைற்தாபகர் கந்தையாபிள்ளை தொழிலகத்தை அமைத்தவர். அவரின் பசுமையான நினைவுக்காக மில்க்வைற் வெளியீடுகள் ஆண்டுதோறும் வெளிவருகின்றன. இம்முறை வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை பொழிப்புரை, ஆங்கிலமொழிபெயர்ப்பு ஆதியனவோடு வெளிவந்துள்ளது.

இனி இவ்வாண்டு தொடக்கம் தாபகர் கந்தையா பிள்ளை அவர்களின் நினைவு மேலிடங்களிலும் படர்ந்து ஒளி வீசப்போகிறது. தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா ஆண்டுதோறும் கிடைக்கும். இம்முறை பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கு இப்பரிசு கிடைத்துள்ளது. இதனைத் தொழிலதிபர் கனகராசா, இலக்கியவட்டத்தின் விழாவில் நேரில் வழங்கினார்.

### வேம்பு பூத்துள்ளது

வேம்பு பூத்துள்ளது. வெயில் எறிக்கிறது. ஓரளவு பூக்களை கொய்தும், சேகரித்தும் வடகம் செய்யவும், பயன்படுத்தவும் நினைவு செய்கிறோம்.

## தமிழில் வழங்கும் மீனினங்களின் பெயர்களில் ஒருசில

| | |
|---|---|
| அள்ளாத்தி | கிளாங்கான் |
| அளை | கிளுவை |
| உளுவை | கீச்சான் |
| ஊடான் | கீளி |
| எறியால் | குண்டேறு |
| ஏமின் | கும்பளமோசு |
| ஏரங்கம் | கும்பளா |
| ஓங்கில் | குரவை |
| ஓட்டாங்கிளிஞ்சல் | குருவி |
| ஓட்டாம்பாரை | குழுமுரல் |
| ஓரா | குள்ளக்கொண்டை |
| ஓலைவாளை | கொங்கணியான் |
| கச்சலி | கொச்சாளை |
| கட்டாம்பாரை | கொடிச்சிவாலி |
| கணவாய் | கொடுவாய் |
| கத்தலை | கொத்தனை |
| கலவாய் | கொம்பன் |
| களங்கட்டி | கொறுக்கை |
| காசாம்பாரை | கோலா |
| காதலம் | கோலாச்சி |
| காலா | |
| காணுங்கெளிறு | |

— தொடரும்

## வானொலி காவியம்

இன்று வானொலி நாடகங்கள் என்பன காதாற்கேட்டு ரசிப்பனவாகவுள்ளன. வானொலி கண்டுபிடிக்கப்பெற முன்னர் மிகப்பழைய காளிதாச கவிக்கும் முற்பட்ட பாச கவி என்பவர் பதின்மூன்று நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றுட் சில கிராவ்ய காவியம் என வழங்கும். கிராவ்ய காவியம் காதாற்கேட்டு ரசிக்கத்தக்கன என்பது கருத்தாகும். திருசிய காவியங்கள் ரூபகம், உபரூபகம் என வருவன. ரூபகங்களில் முக்கியமானவை நாடகம். பாசகவி எழுதிய மத்யமவியாயோகம் என்னும் காவியம் கிராவ்ய காவியமாகப் புகழ்பெற்றுள்ளது.

### நல்லை ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்கள்

நல்லை ஆதீனத்துப்பரமாசாரிய சுவாமிகள் நாளும் செய்துவருகின்ற நற்பணிகளைத் தொழிலதிபர் கனகராசா போற்றிப் பேசியுள்ளார். சுவாமிகள் செய்துவருகின்ற சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணிகளுக்கு நாம் எல்லோரும் உதவி செய்தல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ஆதீனத்தில் கந்தபுராணபடனம், திருமுறை முற்றோதல், சிறுவர் பாடசாலைப்படிப்பு, பசு வளர்த்தல், யோகாசனப்பயிற்சி அளித்தல் முதலியன செயற்கரும் பெரும்பணிகள் என்று பாராட்டிப் போற்றினார்.

★ தாய் தந்தையரே முதற் கடவுள் ★




## பெண்கள் அணிநடை

ஒவ்வொரு நாட்டிலும்உள்ள குடிசனத்தொகையில் ஏறக்குறைய அரைப்பங்கினர் பெண்கள். சிலநாடுகளில் சிறிதளவு கூடியவர்களாயும் உள்ளார்கள். இன்று உலக மெங்கும் பெண்கள் எல்லாத்துறைகளிலும் புகுந்து பங்களிப்புச் செய்கிறார்கள். சிலகாலத்துக்கு முன் பெண்கள் வெளியுலக அநுபவம் இல்லாதவராய் வீட்டுக்குள்ளேயே பூட்டப்பட்டு - கிளிக்கூட்டுவாழ்வு வாழ்ந்தார்கள்.

அண்மையில் பெண்கள் வாக்குரிமை பெற்றார்கள். வாக்குரிமை பெறுவதற்காக அவர்கள் அணிதிரண்டு நடந்த நடை சவ்விறகேற்ஸ் - எனப்பெயர் பெற்றது. அவர்களால் 1929 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் பெண்கள் வாக்குரிமை பெற்ற மூச்சில், டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைப் பெண்களையும் தூக்கி விட்டார். அதனால் உற்சாகமுற்ற திருமதி அதெலில் மொலமுரே, திருவாட்டி நேசம்மா சரவணமுத்து இலங்கை அரசாங்கசபையை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அலங்கரித்தார்கள். அம்மாடி! எங்கடை பெண்டுகளும் தென்னிலங்கையில் தெரியப்பெற்ற நல்லுறவுக்காலம் அது. அது நிற்க.

சென்ற நூற்றாண்டிலே கரோலின் நோட்டன் என்பார் விவாகரத்து வைபவத்தில் மாதர் உரிமையை வலுவாக்கினார். சோவியாயெக்ஸ்பிளாக் என்பார் மாதரும் டொக்டர்களாகலாம் என வழிபிறப்பித்தார். எமிலிடேவிஸ் பெண்களுக்கும் சமகல்வியுரிமையை வாதாடிப் பெற்றார். அவர் கேட்டன் கல்லூரியை (Girton College) மகளிர்க்காக ஆரம்பித்தார். அது இன்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தோடு கலந்துள்ளது.

அரசியல், பொருளாதாரத்துறைகளில் எமிலின் பங்கேஸ்ற் என்பார் தலைமையில் திரண்ட அணிநடை ஐரோப்பாவை அதிரவைத்தது, சிந்திக்கவைத்தது, ஆதரவுபெற்றது, அநுகூலமானது. அவர்கள் எல்லோரும் வாழ்க!

## பத்தி சைவம்

வடபாரதத்தில் பக்திமார்க்கம் ஒன்பது வகையாக கூறப்பெறுகிறது. அவை ஸ்வரணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்கம் ஆத்மநிவேதனம் என்பனவாம்.

## பொன்

பலர் புகழ் பொன்னுக்குத்தான் எத்தனை பெயர்கள். எந்த மொழியிலும் அதற்கு அழகிய பெயர்கள் உண்டு. பொன் கொண்டு செய்தவை யாவும் அழகானவை. சின்னஞ்சிறிய மூக்குத்திமுதல் பென்னம்பெரிய தேர்களும் பொன்னாலாயவை அழகானவை. பிற்காலசோழமன்னர் சிதம்பரேசுவரருக்குப் பொன் வேய்ந்த கூரை செய்து உள்ளனர். பொன்னாபரணங்கள் எத்தனையோ விதமானவை. பொன்னாலான கிண்ணங்கள் தாம்பாளங்கள் பலவிதமானவை. செல்வத்தை மதிப்பது பொன் கொண்டே. எங்கெங்கே பொன் அகப்படுமோ அங்கெல்லாம் மக்கள் விரைந்தனர். இந்தியாவில் ஒரு காலத்தில் பொன் விளைந்த களத்தூர் என ஓர் ஊர் புகழ் பெற்றிருந்தது. பின்னர் தென்னமெரிக்கா, தென்னாபிரிக்கா முதலாய பிரதேசங்கள் பொன் கொழித்தன. தென்னாபிரிக்காவிற் பொற்சுரங்கங்கள் நிறையவுள்ளன. தென்னமெரிக்காவில் மெக்சிக்கோ, பேரு முதலிய நகரங்கள் இந்த மஞ்சள் நிற உலோகத்துக்குப் பெரும் பெயர் பெற்றிருந்தன. அவுஸ்திரேலியாவிலும் ஓரளவு பொன் கிடைக்கிறது.

## அறிந்து கொள்ளுங்கள்

1 பூர்வபுண்ணியம் முற்பிறவியின் நற்பணியின் நற்பயன்.

2 முற்பகல்செய்த புண்ணியமும் பிற்பகல் பூர்வ புண்ணியமாகும்.

3 முயற்சியில் தளர்ச்சியின்றி எழுச்சியே வேண்டும்.

4 விடாமுயற்சியால் பலகாரியங்களைச் சாதிக்கலாம்.

5 கர்வங் கொள்பவனின் அழகு விரைவில் கெட்டு விடுகிறது.

6 ஒருவரை என்றும் காப்பவை பண்பும் தருமகுணமுமேயாம்.

7 வாழ்வு, வழிபாடு எல்லாம் நம்பிக்கையால் சிறக்கின்றன.

8 தாய்மார் குழந்தைகளில் நம்பிக்கை அதிகமாகக் கொள்வர்.

9 அழகும் இளமையும் கொண்ட பெண்ணை ஆழ்வார் என்பர்.

10 கல்வி இல்லையேல் முன்னேற்றம் இல்லையாகிவிடும்

11 எந்தக்கதவை அடைத்தாலும் தர்மத்தின் கதவை மூடமுடியாது.

12 பஞ்சகச்ச உடை ஆமை போல் புலனடக்கமாகும்.

13 கடவுள் பக்தியால் அச்சம் அகலுகின்றது.

14 சாந்தநிலை கைவந்தவனுக்கு அகந்தை அகலுகின்றது.

15 பரோபகாரம் செய்பவனைத் துக்கம் தீண்டுவதில்லை.

16 ஒழுக்கம் ஒன்றினால் பல நன்மைகள் நம்மைச் சேருகின்றன.

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

★ கடவுளை வணங்குதல் தலையாய கடன் ★

# 1986 மே மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | வியாழன் | — நடேசர் அபிடேகம்<br>திருவோணம்<br>அட்டமி - நவமி<br>மேதினம் |
| 2. | வெள்ளி | — நவமி இரவு 12-32 வரை |
| 3. | சனி | — திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை |
| 4. | ஞாயிறு | — ஏகாதசி விரதம்<br>சேர். முத்துக்குமாரசுவாமி தினம் |
| 6. | செவ்வாய் | பிரதோஷ விரதம்<br>சுதுமலை புவனேஸ்வரி கொடி<br>இரவீந்திரநாத் தாகூர் பிறந்த நாள் |
| 7. | புதன் | — அக்கினி நாளாரம்பம் |
| 8. | வியாழன் | — அமாவாசை<br>சிறுத்தொண்டநாயனுர் குருபூசை |
| 9. | வெள்ளி | — கார்த்திகை விரதம் |
| 11. | ஞாயிறு | — கவியோகி சுத்தானந்த பாரதியார் பிறந்த நாள் |
| 12. | திங்கள் | — பருளாய் சிவசுப்பிரமணியர் கொடி |
| 13. | செவ்வாய் | — கும்பழாவளவுப் பிள்ளையார்,<br>சித்தன்கேணிப் பிள்ளையார்,<br>கந்தரோடைப் பிள்ளையார் கொடி. |
| 14. | புதன் | — தாவடிப் பிள்ளையார்,<br>உரும்பராய்பருவதவர்த்தினி,<br>உசன் கந்தசுவாமி கோவில்,<br>கொக்குவில் சுப்பிரமணியர்,<br>திருக்கேதீச்சுரம் கொடி. |
| 15. | வியாழன் | — தமிழ் வைகாசி பிறப்பு<br>காரைநகர் பாலாவோடை அம்மன் கொடி |
| 16. | வெள்ளி | — பகல் 2-12 மேல் அட்டமி<br>ஆயிலியம் |
| 17. | சனி | — அட்டமி - நவமி |
| 18. | ஞாயிறு | — நவமி பகல் 1-35 வரை |
| 19. | திங்கள் | — ஸ்ரீநிவாச ஐயங்கார் நினைவு தினம் |
| 20. | செவ்வாய் | — ஏகாதசி விரதம் |
| 21. | புதன் | — பிரதோஷ விரதம் |
| 22. | வியாழன் | — தேசீய வீரர் தினம் |
| 23. | வெள்ளி | — பூரணை<br>வைகாசி விசாகம்<br>வன்னி விளாங்குளம் பொங்கல் |
| 24. | சனி | — விசாக மேலதிக விடுமுறை |
| 25. | ஞாயிறு | — திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் குருபூசை |
| 26. | திங்கள் | — வற்ருப்பழை பொங்கல் |
| 28. | புதன் | — அக்கினிநாள் முடிவு<br>வண்ணை வீரமாகாளி கொடி |
| 30. | வெள்ளி | — பகல் 12-30 மேல் அட்டமி |
| 31. | சனி | — அட்டமி - நவமி<br>இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கொடி. |

உ



## நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மேமாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 9-5-86 | வெள்ளி | — கார்த்திகை உற்சவம்<br>மாலை 5-00 மணி |
| 10-5-86 | சனி | — கந்தபுராணப்படிப்பு ஆரம்பம். |
| 15-5-86 | வியாழன் | — சங்கிராந்தி தீர்த்தம்<br>காலை 8-00 மணி<br>முத்துக்குமாரசாமி சஷ்டி அபிடேகம் காலை |
| 23-5-86 | வெள்ளி | — வைகாசி விசாகம்<br>ஆறுமுக சுவாமி ஸ்நபனுபிஷேகம்<br>நியாசார்ச்சனை மாலை 5 மணி |

## தமிழில் வழங்கும் தெலுங்குச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 168 | முகாரி | — ஓர் இராகம் |
| 169 | மும்முரம் | — உக்கிரம் |
| 170 | மெருகு | — துலங்குகை |
| 171 | மொத்து | — அடி |
| 172 | மோறை | — மோவாய் |
| 173 | ரீதி | — ஒழுங்கு |
| 174 | வாடகை | — குடிக்கூலி |
| 175 | வாடிக்கை | — வழக்கம் |
| 176 | வாலாயம் | — மிக்க பழக்கம் |
| 177 | விக்கிரயம் | — விற்பனை |
| 178 | விந்தை | — ஆச்சரியம் |
| 179 | விருது | — கொடி |
| 180 | வெல்லம் | — கருப்பஞ்சாற்றுக் கட்டி |
| 181 | வேடிக்கை | — விநோதம் |

தரித்திரம் வந்தாலும் கடமை தவறலாகாது

## காஞ்சிப் பெரியவர்

இந்துமதப்பிரிவினர் தங்களுள் கொள்கை கோட்பாடு காரணமாகப் பகைமை கொள்ளாதவாறு ஆறு பிரிவுகளையும் சண்மதங்கள் எனப்பெயரிட்டு மடங்கள் நிறுவிய சங்கராசாரியர் தாம் காசியில் நிறுவியமடத்தில் பீடாதிபதியாயிருந்து சமயபரிபாலனஞ் செய்து சமாதி கூடினார். அவரின் உபதேசபரம்பரையில் அறுபத்தெட்டாம் பீடாதிபதியாக அலங்கரித்து வந்தவர் ஸ்ரீசந்திரசேக ரேந்திர சரஸ்வதி என்னும் திருநாமம் பெற்ற பெரியவர். அவர் தியான வாழ்வில் இருப்பதற்காக ஓய்வெடுத்துத் தமது சீடரைப் புதுப்பெரியவராக அபிடேகஞ் செய்துள்ளார். வீட்டுக்கொருபசு, கோபுரதரிசனம் கோடி புண்ணியம் முதலிய சுலோகங்களை அவரிடம் கேட்ட தொழிலதிபர் கனகராசா அவர்கள்; பசுவளர்த்தலிலும், கோபுரம் அமைத்தலிலும் மக்களை உற்சாகப்படுத்தி வருகிறார் என்பது தெரிந்ததே. வீட்டுக்கொரு பசு வளர்த்தல் லட்சுமி கடாட்சமாகும். பசுவளர்ப்போர் கூடியுள்ள சங்கம் ஒன்றுள்ளது. அதனால் பசுவளர்ப்பவர்களுக்கு நல்ல காலம் பிறக்கப்போகிறது.

## பரநலம் பெரிய பலம்

பரநலம் என்னும் பொதுநலம் செய்யத் தொடங்கியதும் எங்கேயோ இருந்து உனக்கு ஒருவலிமை வந்து சேருகிறது. அது எங்கிருந்தும் வரவில்லை. உள்ளே இருந்துதான் வந்தது. அது உள்ளார்ந்த ஊக்குவிப்பு. பொது நலத்தால் நாம் எல்லோரையும் நேசிக்கிறோம். ஆர்க்கும் இடுமின். அவர் இவர் என்னன் மின். பரநலம் சக்தியை எழுப்பவல்லது. சிறந்த ஊழியஞ்செய்பவன், பொறுமையையும் கைக்கொண்டால், அவன் செங்கோல் ஏந்திய வேந்தனிலும் பெரியவன்.

## அறக்கொடை அன்புக்கொடை

மலேசியா வாசியாகிய அன்பர் சின்னப்பு அவர்கள் அளவெட்டியைச் சேர்ந்தவர். அவர் தம்முடைய பிறந்தகத்து ஏழைகள்மீதிரங்கி ஆண்டுதோறும் அவர்களுக்கு அரிசி, புடைவை, பணம் ஆகிய மூவகைத் தானங்கள் செய்கிறார். அவர் அங்கிருந்து செய்யும் தர்மத்துக்கு முதற்சாட்சி கும்பழாவளைப் பிள்ளையார். இரண்டாம் சாட்சி சூரியபகவான். மூன்றாம் சாட்சி மில்க்வைற் தொழிலதிபர். அன்று புத்தாண்டையொட்டி நடைபெற்ற தானத்தின்போது சாட்சியமளித்த தொழிலதிபர் அன்பர் சின்னப்பரை வாழ்த்தி, எல்லோரும் இயன்றளவு தானம் செய்தல் நல்லது. அதுவும் உயிர் உள்ளவர்களுக்குத் தானம் செய்தலே உத்தமமானது என்று குறிப்பிட்டார்.

## வேலாயுதன்

வேல் பிடித்த திருக்காத்தோன் வேலாயுதன். அவன் கதிர்வேலவன், ஞானபண்டிதன், சக்திவேலன், வெற்றிவேலன்.

## நவக்கிரகங்களும் - நவதானியங்களும்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | கோதுமை |
| சந்திரன் | — | நெல் |
| செவ்வாய் | — | துவரை |
| ராகு | — | உழுந்து |
| வியாழன் | — | கடலை |
| சனி | — | எள்ளு |
| புதன் | — | பயறு |
| கேது | — | கொள் |
| வெள்ளி | — | மொச்சை |

## நவரத்தினங்களின் அமைவு

| | | |
|---|---|---|
| மாணிக்கம் | — | மையம் |
| வைரம் | — | கிழக்கு |
| முத்து | — | தென்கிழக்கு |
| பவளம் | — | தெற்கு |
| கோமேதகம் | — | தென்மேற்கு |
| நீலம் | — | மேற்கு |
| புட்பராகம் | — | வடமேற்கு |
| வைடூரியம் | — | வடக்கு |
| மரகதம் | — | வடகிழக்கு |


## நவக்கிரகங்களுக்கு நவமணிகள்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | மாணிக்கம் |
| சந்திரன் | — | முத்து |
| செவ்வாய் | — | பவழம் |
| புதன் | — | மரகதம் |
| குரு | — | புஷ்பராகம் |
| சுக்கிரன் | — | வைரம் |
| சனி | — | நீலம் |
| ராகு | — | கோமேதகம் |
| கேது | — | வைடூரியம் |

## விரலுக்குத் தக்க வீக்கம்

அணிற்பிள்ளையும் ஸ்ரீராமர் அமைத்த சேதுபந்தனத்தில் பங்களிப்புச் செய்தது. இன்று தமிழ்நாட்டு மாநிலவரசு செய்யும் தமிழ்ப்பணி எங்கே, இராசராசன் விருது எங்கே, தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகப் பங்களிப்பு எங்கே, தமிழ்ச்சங்கம் எங்கே, உலகமளாவிய புதிய தமிழ்ச்சங்கமெங்கே, நாமெங்கே? நாமும்கூட, நாமும் கூட என்று ஏதோ செய்கிறோம். எப்படிச் செய்கிறோம், எந்தவலுவால் செய்கிறோம், என்று பார்க்கும் போது, மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு எங்கள் அபிமானிகள் தருகின்ற அன்பாதரவினால் செய்கின்றோம். ஆதரவுப்பலம் பெருகப்பெருக எங்கள் பணியும் பல்கிப்பெருகும். இது விளம்பரமல்ல. பணிவன்பான வேண்டுகோள்.

★ பெண்கள் குறைவாக உண்ணுதல் நன்மைதரும் ★



## ஆசிரியர் பகுதி

(அண்மையில் ஆயிரக்கணக்கானோர் ஆசிரியவுலகில் பிரவேசித்துள்ளார்கள். அவர்களுள் நம்மவர் ஒரு சிலராயிருந்த போதிலும், இவர்கள் தங்கள் சேவையைச் செவ்வனே செய்தல் வேண்டும். திறமைசாலிகளுக்கு என்றும் எங்கும் புகழ் வந்துசேரும். சிலருக்கு காலம் தாழ்த்தி வரலாம். நம்மவர் மனமுடையாமல் சேவை செய்தல் நமது தேவை.)

### அப்பியாசம்

1. கொடுக்க வேண்டிய அறிவுறுத்தல்களை நன்ருகக் கொடுத்து, மாணுக்கரின் அவதான சக்தியை நெறிப்படுத்திவிடுக.

2. நீங்கள் கொடுக்கும் அப்பியாசங்கள் இலகுவானவையிலிருந்து கடினமானவைவரை படிக்கிரமமாக அமைதல் விரும்பத்தக்கது.

3. அப்பியாசங்கள் தரப்படுத்தப்பட்டுப் பலவிதமானவையாகவும், விரும்பத்தக்கனவாகவும், விளையாட்டு முறை கலந்தனவாயும் அமைதல் நன்று. கீழ்வகுப்புகளில் விளையாட்டு முறையே நன்மை பயப்பதாகும்.

4. அப்பியாசங்களைத் திட்டமிட்டு கொடுக்கும் போது மாணுக்கர்களிடம் உபகரணங்கள் ஆயத்தமாயிருக்கின்றனவோ எனக் கவனித்தல் வேண்டும்.

5. வாய்முறை அப்பியாசங்கள் எழுத்து முறை அப்பியாசங்களுக்கு முன் அமைதல் வேண்டும்.

6. அப்பியாசம் கொடுக்கும் போது போதிய ஆவகாசமும் கொடுத்தல் வேண்டும்.

7. அப்பியாசங்களிடையே சுயாதீன செயற்பாடு இடம் பெறச்செய்தல் விரும்பத்தக்கது.

8. அப்பியாசங்களை விநியோகிக்கும் போது மாணுக்கர் தலைவனே அவற்றை விநியோகித்தல் விரும்பத்தக்கது.

9. மாணுக்கர் விடைகள் எழுதியபின் அவற்றை மீளப்பார்த்தல், ஒழுங்குபடுத்தல் முதலிய பழக்கங்களைப் பழக வாய்ப்பு அளித்தல் வேண்டும்.

10. விடை எழுதும் போது எழுத்தின் தரத்தைக்கவனிக்குமாறு பழக்கிவிடுதல் விரும்பத்தக்கது.

## பாகற்காய்

மரக்கறியுணவில் கைப்பனவுள் பாகலும் ஒன்று. கொடியினத்துக் காய்கறிகளுள் பாகல் வேலியோரத்தில் சிறிய இடத்தில் பெரிய பயன் தருவது. தண்ணீர் அதிகம் தேவையில்லை. வெயிலைத்தாங்கி நின்றுபடர்ந்து நன்ருகக் காய்ப்பது. மனிதவுடலிலுள்ள சுரப்பிகளுள் பங்கிரியாஸ் என்னும் பெரிய சுரப்பியை நன்ருகச் சுரக்கச் செய்வதால் நீரிழிவு நோயாளருக்குப் பாகற்காய் வரப்பிரசாதம்.

## சுறுசுறுப்பான விமானத் தளங்கள்

இன்று சர்வதேச விமானங்கள் வந்திறங்கித்தரித்துப் போகும் தளங்கள் உலகமெங்கும் அமைந்திருந்தாலும், சிகாகோ நகரின் ஓஹேயர் தளத்தில் ஆண்டுதோறும் 7,14,000 விமானங்கள் வந்து போகின்றனவாம். இப்படியாளுல் தினமும் 2000 விமானங்கள் இராப்பகலாக வந்து போகின்றனவாம். இனி லண்டனிலுள்ள ஹீத்ரோ தளத்தில் ஆண்டுதோறும் 2,78,000 விமானங்களும், ரொறன்ரோ (கனடா) தளத்தில் 2,50,000 விமானங்களும் வந்துபோகின்றன. கோழிக்குஞ்சுக்குப் போதாத இடத்தில் தீப்பறவை உலாவினுற்போல நம் தளம் அமையுமோ?

## நினைவாற்றல்

நினைவாற்றல் என்பது ஞாபகசக்தி. எவர் ஒருவர் ஒரு பந்தியையோ, ஒருபாடலையோ ஒருமுறை பார்த்தாலோ கேட்டாலோ பாடமாக்கி ஒப்புவித்தால், அவர் நினைவாற்றல் உள்ளவர் என்பது வெளிப்படை. இங்ஙனம் இருபாலை நெல்லைநாதமுதலியார் நினைவாற்றலுக்குப் பெயர்பெற்று ஏகசந்தக்கிராகி எனப் புகழ்பெற்றவர்.

அண்மைக்காலத்தில் பல்கலைக்கழகப் புகழ் பெற்ற அமரர் கலாநிதி தனஞ்சயராசசிங்கம் ஒருமுறை படித்ததைப் பாடமாக்கக்கூடியவராயிருந்தார். நினைவாற்றல் உள்ளவர்வேறு, சப்பல்கட்டை வேறு.

ஆங்கிலப்புலவர்களுள் கலாநிதி யோண்சன் மன்னர் மதிக்க வாழ்ந்தவர். இளமையில் ''மகனே இதைப்படி'' என்று தாயார் எதையாவது கொடுத்துவிட்டு, மாடிப்படியேறி மேலே போவதற்குள் ''மம்மி!'' என்று பின் தொடர்ந்த யோண்சன் அந்தவிடயத்தைப் புத்தகம் பாராமலே சொல்லிக்கொண்டு பின்தொடருவாராம். இது கடவுட்கொடை. வரப்பிரசாதம்.


## அட்சய வருடப்பிறப்பு விழா

இன்றைய சூழ்நிலையில் விழாக்கள் வேடிக்கைகளுக்கு இடமில்லையாயினும் கருமாதிகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஒன்றிருக்கிறது. இந்த அடிப்படையில் கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியசுவாமி கோயிலார் நல்லமுறையில் விழாவெடுத்தார்கள். கலியுக வரதனை கந்தப்பெருமான் அவர்களையும் எங்களையும் காத்தருள்புரிவாராக.

★ குடும்ப வாழ்க்கையே மேலான வாழ்க்கை ★

## விவேகானந்த வெள்ளம்

### அன்புள்ளவர்க்கான ஆராதனை



அன்புள்ளம் கொண்டவர்கள் கடவுளைத் தேடிப் போகும் வழியில் பலவீனர்களைக் கண்டால், முதலில் அவர்களை ஆராதியுங்கள். அன்பு வெற்றியளித்தல் நிச்சயம். கங்கைக் கரையில் கிணறு தோண்ட வேண்டிய அவசியம் இல்லை. அன்புள்ள இருதயத்தை எவராலும் எதிர்க்க முடியாது. அன்புக்கு தோல்வி கிடையாது. சத்தியம் கட்டாயமாக வெற்றி பெறும். சத்தியம், அன்பு, உண்மையுள்ளம் இவற்றை எதுவும் எதிர்த்து நிற்க மாட்டாது. அன்புள்ளவர்கள் இயமனுக்கு அஞ்சமாட்டார்கள்.

## ஆங்கிலத்தில் அடுக்குமொழி

Regard and esteem.
Regular and symmetrical.
Rejection and scorn.
Reliable and trustworthy
Relief and redress.
Remote and distant.
Repress and silence.
Repulsive and loathsome.
Resentment and indignation.
Restless and impatient.
Retaliation and revenge.
Revised and corrected.
Redicule and censure.
Rivals and antagonists.
Rough and barren.
Roundabout and completed.
Roused and stimulated.
Rust and disuse.

## அறிந்துகொள்ளுங்கள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

17 புண்ணியம் காலத்தையும் தூரத்தையும் கடந்து ஒளி காலும்.

18 நம்மை ஊக்குவிப்பது கடமை உணர்ச்சியாதல் வேண்டும்.

19 மனிதவாழ்வில் அமையவேண்டியது இலட்சியம்.

20 யோகம் என்பது மனம் கடவுளிடம் லயித்துநிற்பதாகும்.

21 மலர்கள் பலவாய நன்மைகளைச் செய்கின்றன.

22 பிரமச்சரியம் என்பது மனத்தை ஒடுக்கிவைத்திருத்தலாம்.

23 ஆசையின் ஆரவாரம் அடங்கினால் ஆனந்தம்.

24 சுத்தமான மனமே தலைசிறந்த ஆலயம்.

25 சுத்தம், ஆனந்தம், சுகம், சாந்தம் வேறென்ன தேவை.

## சுற்றாடல் கவனம்

மாணாக்கர் இளமையிலேயே சுற்றாடல் சம்பந்தமாக அறிதல் வேண்டும் எனக்கருதி இரண்டாம் வகுப்பு என வழங்கும் மூன்றாம் பள்ளி ஆண்டிலேயே ஒரு புத்தகத்தையும் சுமத்துகிறோம். சுற்றாடல் பத்திரம் என்று பெரியவர்கள் சொல்லிக்கொண்டே பிள்ளைகள் அறிந்து கொள்ள முடியாத வகையில் சுற்றாடலைப் பலவிதமாக மாசுப்படுத்துகிறார்கள், நஞ்சு படுத்துகிறார்கள்.


கெமிக்கல்ஸ் என வழங்கும் இரசாயனப் பண்டங்கள் பலவிதமாக பலதேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வண்டுகொல்லி, பூச்சிகொல்லி, களைகொல்லி, கறையான்கொல்லி, எலிகொல்லி எல்லாம் நச்சுத் தன்மை வாய்ந்தவை.

பிள்ளைகள் விரும்பியுண்ணும் உணவுகளில் வர்ணங்கள், பாதுகாப்புக்குரியவை என்னும் (பிறிசவேற்றிவ்) இரசாயனங்கள் அடைக்கப்படும் அலுமினிய தகரப் பாத்திரங்கள் எல்லாம் நல்லவை என்பதற்கு ஆதாரம் என்ன? மனிதர் உட்கொள்ளும் மருந்து வகைகளில் குளிகைகள், கலவைகள் யாவும் இரசாயனவஸ்துக்கள் கலக்கப்பட்டவை. ரொக்சைட் என்பன, நித்திரைக் குளிகைகள் யாவும் மனிதனை உட்புறமாக ஊடறுக்கின்றன. கொஞ்சம் மூலிகையுலகில் பிரவேசித்து இலை, தழை, பூ, காய், விதை, பட்டை, வேர் என்பனவற்றை மீண்டும் பழகிக்கொண்டால் நல்லது.

## முக் கண்ணன்

முக்கண்ணன் என்பது கண்மேல் ஒரு கண்ணுள்ளவனான நெற்றிக்கண்ணனான சிவனைக் குறிக்கும் பெயர் அவர் ஞானசொரூபி. அவர் மெதுவாக நெற்றிக்கண்ணைத் திறந்ததும் காமவேள் வெந்து சாம்பராயினான். ஞானம் பெற்றவர்க்குக் காமம் கிடையாது.

★ தருமம் செய்யாதவர் செல்வம் கெடும் ★



## பசுவின் குரல்

அம்மா! தாயே! நான் மாட்டினத்துக்காக மணியடித்துக் குரல் கொடுக்கிறேன். தயவுசெய்து கேளுங்கள். நீங்கள் நினைத்தால் மாட்டிறைச்சி வீட்டுக்கு வராது. உண்பவர் இல்லையானல் இறைச்சி அடிப்பவரும் இல்லை. இதை ஆராய்ந்து பாருங்கள் அம்மா! எங்கள் இனம் மாட்டினம். நீங்கள் பிறக்கும் இருபத்தேழு நட்சத்திரங்களும் பன்னிரண்டு இராசிகளில் அடங்கும். இந்தப் பன்னிரண்டு இராசிகளுள் எங்கள் பெயர் தாங்கி உங்களை ஆட்சி செய்யும் இராசியும் ஒன்று. அதன் திருநாமங்களைக் கேளுங்கள் அம்மா.

விடை, நந்தி, இடபம், பசு, நரை, ஏறு, மூரி, எருது, ஆன், தாவுரி, குண்டை, சே, புல்லம், நூபம், பெற்றம், பூணி என்பனவும் இன்னும் பலவுமானவை.

## வாசிக்கும் பழக்கம்

லண்டன் என்னும் சீமையிலே ஏழுபெரும் பத்திரிகைகள் நாளாந்தம் 17000000 பிரதிகளை வெளியிடுகின்றன. இவை ஞாயிறுதோறும் 26000000 பிரதிகள் பிரசுரிக்கின்றன. மாலையில் மலரும் 30,00000 பிரதிகள் பக்கபலமாக அமைந்தவை.

லண்டனில் 1000 பேருள் 825 பேர் வாசிக்கிருர்கள். எம்மவர் வாசிக்கும் பழக்கம் பரவி வருவதால் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெருகுதல் வரப்பிரசாதமாக அமையும். யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்ருண்டிலேயே பத்திரிகைகள் ப்ரவலாக வெளிவந்து மறைந்து போயின. அவற்றின் பழைய இதழ்களில் மணிமணியான செய்திகள் வெளிவந்துள்ளன.

## சிவலிங்க தரிசனம்

சிவலிங்கம் சிவபெருமானின் அருவுருவத்திருமேனி. இதனை காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்றுவேளைகளிலும் தரிசித்து வணங்குதல் வேண்டும். பிரதோஷ வேளையில் தரிசித்து வணங்கினுல் பெரும் பாக்கியம் பெரும் பேறு கிடைக்கும்.

# அருள் விருந்து

### (தர்ம சக்கரம்)

1 முகமலர்ச்சி உள்ளவன் உலகத்துக்கு உரியவன்.
2 சத்தியத்தைப் பேணுபவன் நன்மைக்குத் தலை வணங்குவான்.
3 ஒழுக்கத்தால் இச்சையைத் தூயதாக்கவேண்டும்.
4 மானுட சேவை ஆத்ம சாதனமாதல் வேண்டும்.
5 தன்னை வென்றவனை எவரும் ஒன்றுஞ் செய்ய முடியாது.
6 முகமலர்ச்சி செலவில்லாத கொடையாகும்.
7 முகமலர்ச்சியை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.
8 தற்பெருமையுள்ளவன் தாழ்த்தப்படுவான்.
9 உயிராயும் உண்மையாயும் ஒளியாயும் உள்ளவர் இறை.
10 தியாக சிந்தனையில் ஆணவத்துக்கு இடமில்லை.
11 முகமலர்ச்சி காட்டுபவனுக்கும் காண்பவனுக்கும் மகிழ்ச்சி.
12 பணத்தைச் சீராகச் செலவிடுபவனே செல்வன்.
13 பொறிவாயில் போகாதவர் ஆன்ம நெறி காண்பர்.
14 அன்பு ஒன்றே என்றும் தோல்வி காணுதது.
15 இன்பத்தை நாடும்போது துன்பமும் வரும்.
16 தியானத்தால் மூர்த்தியின் உருவம் உளத்தில் பதியும்.
17 முன்னேற்றங்களுள் சிறந்தது ஆன்மமுன்னேற்றம்.
18 எந்த ஏழையும் முகமலர்ச்சியை வழங்கலாம்.
19 மௌனத்தைப் போன்ற நண்பன் உலகிலில்லை.
20 சுயநலம் நீங்கினுல் தெய்விகம் தானே வரும்.


## ஒல்லாந்தர் உபகரித்தவை

யாழ்ப்பாணத்தில் பறங்கிக்காரர் 38 ஆண்டுகளில் செய்த அழிவுகள் அளவில்லாதவை. அவர்கள் விட்டுச் சென்ற ஆக்கங்கள் அற்பமானவை. ஆனல் ஒல்லாந்தர் 140 ஆண்டளவில் செய்த அழிவுகள் குறைவு. அவர்கள் விட்டுச்சென்ற ஆக்கபூர்வமான வேலைப்பாடுகள் அதிகம்.

ஒல்லாந்தர் கட்டடவேலைகள் பழக்கினர். மரவேலை, இரும்புவேலை, நெசவுவேலை, சாயவேலை, ஆடைவேலை, படிப்புமுறை, வர்த்தகமுறை, வீதியமைத்தல், மண்டபங்கள் அமைத்தல் முதலியவற்றில் மக்கள் நல்ல பயிற்சி பெற்றனர்.

ஒல்லாந்தர் நல்லமுறையில் அமைந்த வர்த்தகத்தை நமக்குப் பழக்கிச் சென்றனர். வடபகுதியில் முன்னென்றும் இல்லாத அளவில் தோணிகள், வள்ளங்கள் மிதந்து சென்றன. தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் ஒன்ருன கோடிக்கரைக்கு அக்காலத்தில் பனைமரம், பாய், பனுட்டு, கிழங்கு, தேங்காய், தேங்காயெண்ணெய், கயிறு முதலியன ஏற்றுமதியாயின.

**இறைவனை வணங்கும் எண்ணம் வேண்டும்**



# வள்ளல் கனகராசா அன்னை

கலாயோகி மகரிஷி டாக்டர்

**சுத்தானந்த பாரதியார்**

பாடிய

## இரங்கற்பாடல்

கனிவும் கருணையும் கற்பும் பொற்பும்
இனிய தன்மையும் எழிலார் அழகும்
பொலியும் அன்புப் புன்னகை அமுதும்
நலமும் விருந்து நல்கும் கருணையும்
மிக்காள் கனக மில்க்ஒயிட் வள்ளலின்
பக்குவச் சைவப் பக்தியில் ஓங்கும்



தாயார்

**மீனுட்சிப்பிள்ளை**

சிவனடி சேர்ந்தாள் சிந்தனை யெல்லாம்
அவனடி பற்றி அறம்பொருள் இன்பம்
அருள்வழி பாட்டிலே ஆயுளைக் காத்த
கருணைச் செல்வி கைலாச பதவி
அடைந்தனள் எங்கள் அன்பினில் என்றும்
இடையரு திருக்கும் இன்னியள் இலங்கை
வள்ளல் கனகரின் வண்மையைப் போலே
தமிழ்வர லாற்றிலே தண்ணளிச் செல்வியாய்
நமதுளம் பொலிதரு நல்லாள் வாழ்கவே!



## தேசம் உய்ய வந்தவர்

அறுபத்து மூன்று நாயன்மாருள் சமயகுரவர்கள் திருக்கூட்டத்துள், தேவார முதலிகள் சங்கமத்தில் அப்பர் என்று சமகாலத்துச் சம்பந்தப் பெருமானுல் பாராட்டப் பெற்றதேசபிதா திருநாவுக்கரசு நாயனுர். அவர் தேசம் உய்ய வந்த திருத்தொண்டர். தொண்டு செய்வதற் கென்றே ஏந்திய ஆயுதத்தைக் கீழே வைக்காமல் கொண்டு திரிந்த தொண்டர் அவர்.

அப்பர் தொண்டு மொழித்தொண்டு, சமயத் தொண்டு, சமூகத்தொண்டு, நாட்டுத்தொண்டு. வேதனை களுக்குட்பட்டும், நோவேதனையும் உருதபெரியவர். தம்மை வேதனைப்படுத்தியவரையே தம்வழிக்கே அற்புதமாகத் திருப்பித் திருத்திய சாதனையாளர் திருநாவுக்கரசு நாய ஞர்.

தமது உபதேசத்தைச் செயல்மூலம் பரப்பிய அந்த மகான் பட்ட பாடுகள் உலகில் யார் பட்டார். மலையே சரிந்து விழுந்தாலும் இறைவன் திருநாமத்தை ஓதிய வாறு இறுமாந்திருந்தவர் அவர். ஏற்றுய் அடிக்கே என்று பாடத்தொடங்கியவர் உன்னடிக்கே போதுகின் றேன் என்று தம் புகலிடத்தை உலகத்தவருக்குச் சொன்ன நாள் சித்திரைச் சதயம் எனலாம்.

சிந்தையில் இடையருத அன்புகொண்டு செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடியருளிய பண்பினர் அப்பர். தொண்டுசெய்த அவர் என்கடன் பணிசெய்து கிடத்தலே என்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்டவர். அனைவரினதும் மேம்பாட்டுக்காக உழைத்தவரின் அறம் தயாமூலதன்மம். மே தினம் மே தினம் என்று உலகத் தவர் குரலெடுக்கும் மே மாதத்தின் முதல்நாள் அப்பர் அடிகளாருக்கே உரியது. அவர் உலகத்தவருக்கு உழைப் பின் பெருமையை முதலில் கூறியதோடு உழைத்துக் காட்டியவர்.

சொற்குறுதிக்கு அப்பர் எனச் சொல்லுபவர்கள், அவர்தம் மனவுறுதியையும் கணித்தல்வேண்டும். அவர் தேசமுய்ய வந்தமையோடு புவனமுய்யவும் வந்தவர். உலகம் வாழ்கவென வாழ்த்திய உத்தமர். அவரின் உதார குணம் பெரிது.

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி) **புண்ணியக் கண்......**

வார்த்தை எனப் புகழ்பெற்றவை. அவர் பாடல்களை திரு நெறிய தமிழ், மறைவிளங்கு தமிழ், அருள்மாலைத் தமிழ், என்று அவரே கூறியருளியுள்ளார். அவர் பாடல்கள் தமிழாரம் எனவும் வழங்கியதால் அவருக்குத் தமிழின் தொடர்பு மிக்கிருந்தது என்பது போதரும்.

திருஞானசம்பந்தப்பெருமான் உலகம் உய்யவே பாடி யருளினர். உலகுக்குப் பக்திமார்க்கம் அவசியம் எனக் கண்டு பாடியருளிய பாடல்கள் பண்நிரம்பிய பாடல்கள். அவர்காலத்தில் இருபத்துமூன்று பண்கள் பயிலப்பெற்று வந்தன. இந்தளம் என்னும் நாதனமக்கிரியை செந் தமிழ்ப் பாடல்களில் செறிந்து வந்துள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சங்கத் தமிழும் நன்கறிந்து சுவைத்தவர். அவர்தம் அருட்பாடல்களில் குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, நற்றிணை, கலித் தொகை, ஐங்குறுநூறு முதலிய தொகை நூல்களின் கருத் துக்களும் தொடர்களும் பயின்றுவந்துள்ளன. அவர்தம் பாடல்களைப் பக்தியோடு, பத்திமையாலே பாடுதல் எங் கள் கடமை. இசையினுல் இவ்வுலகத்தை இணைக்கலாம். ஏத்திப்பாடி ஆடிமகிழலாம். அவர்தினம் வைகாசி மூலம்.

---

★ ஏழைகளும் இயன்றளவு நன்மை செய்யலாம் ★



## முத்துவேற்பிள்ளை

அன்புள்ள அதிபர் அமர ராயினர்.
அவர்தம் பெருமை அளவிடற் கரியது.
நல்ல குடும்பத்தில் நல்ல பிள்ளையாய்,
நல்ல மாணுக்கனுய், நல்ல படிப்பாளியாய்,
நல்லா சிரியனுய், நல்ல அதிபராய்
நல்லவர் பெரியவர் எல்லோரும் மதிக்க,
நல்ல முறையில் குடும்பம் நடத்தி,
கல்லூரி வளரக் கலைகள் வளர,
அயராது உழைத்து, அனைவர்தம் மேம்பாடு
கருதித் தியாக சிந்தை மலர,
தொண்டுகள் புரிந்து தூயவாழ்வு வாழ்ந்து,
எல்லோரும் ஏங்கித் தவிக்க
முத்துரா சாவெனும் முத்துவேற் பிள்ளை
சித்தம் சிவனடி செல்ல வுடம்பை
இத்தரை விட்டு ஏகினன், அமரனுயினன்.
அவன்பெயர் வாழ்க! அவன்பணி வெல்க!!

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**தேசீய வீரர்களின்**......சென் பிறுன்சில் பறவைகளை யும் மிருகங்களையும் தழுவிய வழியில், பாரதியார் காக்கை, குருவி, பசு, குதிரை, நாய் யாவற்றையும் தழுவிப்பாடினுர். குட்டிகளைப் பூனை அணைப்பதுபோலக் குடிமக்களை அணைக் கத் தெரியாதவர் தலைவராமோ? அவருக்குத் தேசீயம் என்றுல் தலையில் ஏறுமாமோ? தேசீயம் என்றுல் என்ன என்று தமிழராய முத்துக்குமாரசுவாமி, ஆறுமுகநாவலர், அருணுசலம் முதலானோர் முன்மொழிந்தவர்கள். அவர் அன்றே நாம் வணங்கும் தேசீய வீரர்கள். அவர்களுக் கல்லவோ கல்நட்டுப் பூசைசெய்தல்வேண்டும். எமது அரசியல் தேவைகள் என்று பேசுவதற்குத் தேசீய மகா சபையை அமைத்தவர் அருணுசலம். அவர் கண்ட தேசீ யத்தைக் குலைத்த கும்பல் தேசீய வீரர் என்றுல் பூமி பொறுக்காது, பூலோகம் தாங்காது.


மில்க்வைற் தயாரிப்புக்களில்
உங்களுக்குச்
சிறந்தது சிக்கனமானது
நுரைவளம் உள்ளது




மில்க்வைற் பார்சோப்

நிறை 650 கிறும் விலை ரூபா 13-00

1 பார்சோப் மேலுறை அனுப்பி 1 மில்க்வைற் செய்தி அல்லது தமிழ் ஆங்கில உரையுடன் கூடிய வெற்றிவேற்கை புத்தகம் ஒன்றை இனுமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


## யோகாசனமும் பிராணுயாமமும்

உத்தியோகங்களில் ஈடுபட்டோர் பலரும் உரிய பருவத்தில் இளைப்பாறுதல் வழக்கம். சிலர் தமக்குச் சேவை நீடிப்புப்பெற்று மேலும் சேவை செய்தலும் உண்டு. சிலர் இளைப்பாறியும் இழைப்பில்லாமல் வாழ்தலும் உண்டு.

சேவை நீடிப்புக்கு உடல்நலமும் மனநலமும் வாய்த்தல் வேண்டும். உடல்நலம், மனநலம் பெறுவதற்கு உடலப்பியாசங்களைவிட யோகாப்பியாசங்கள் மேலானவை.

உடல்நலமும் மனநலனும் பெற்றவர்கள் சேவை நீடிப்புப் பெறுவதோடு, ஆயுள் நீடிப்பும் பெறுதல் நல்லதும் அவசியமுமாகும். ஆயுள் நீடிப்புக்குச் சுவாச ஒழுங்கு இன்றியமையாதது. சுவாச ஒழுங்கு நல்லமுறையில் நடப்பதற்கு ஒரே ஒரு வழி பிராணுயாமம் ஆகும். யோகாப்பியாசமும் பிராணுயாமமும் இனிமேல் மில்க்வைற் செய்தியில் ஒழுங்காக வெளிவரும்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-5-86.